**செய்தி வெளியீடு எண்: 932** **நாள்: 18.12.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 17.12.2018 அன்று தலைமைச் செயலகத்தில், உள் (போக்குவரத்து) துறை சார்பில், திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லியில் 2 கோடியே 48 லட்சத்து 43 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 10 கோடியே 59 லட்சத்து 37 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள துணை போக்குவரத்து ஆணையர் அலுவலகக் கட்டடம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடங்கள், பகுதி அலுவலகக் கட்டடங்கள் மற்றும் சோதனை சாவடி கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

ஓட்டுநர் உரிமம், புதிய வாகனம் பதிவு செய்தல், போக்குவரத்து வாகனத்திற்கான புதிய அனுமதிச் சீட்டு, அனுமதிச் சீட்டு புதுப்பித்தல், வரி நிலுவை இல்லாச் சான்று, மறு பதிவுக்கான அனுமதி, தடையில்லாச் சான்று மற்றும் பன்னாட்டு ஓட்டுநர் உரிமம் போன்ற பல்வேறு பணிகளுக்காக பொதுமக்கள் போக்குவரத்து அலுவலகங்களுக்கு செல்ல வேண்டியுள்ளது. எனவே, போக்குவரத்து அலுவலகப் பணிகள் சிறப்பான முறையில் நடைபெற வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் பூந்தமல்லி மற்றும் திருப்பூர் (வடக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்றும், புதுக்கோட்டை மாவட்டம் – இலுப்பூர், வேலூர் மாவட்டம் – ஆம்பூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் – முசிறி ஆகிய பகுதி அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்றும் 1.9.2016 அன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிக்கையில் அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லியில், தரை மற்றும் முதல் தளத்துடன், 1610 சதுர மீட்டர் பரப்பளவில், 2 கோடியே 48 லட்சத்து 43 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள். இப்புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடமானது, பொதுமக்கள் காத்திருப்பு அறை, பழகுநர் உரிமம் வழங்கும் அறை, ஓட்டுநர் உரிமம் வழங்கும் அறை, விண்ணப்பதாரர்களுக்கு சாலைப் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து விதிகள் குறித்து விளக்கும் பயிற்சி அறை, வட்டாரப் போக்குவரத்து அலுவலர் அறை, மோட்டார் வாகன ஆய்வாளர்கள் அறை, பணியாளர்கள் அறை,

வாகனங்கள் நிறுத்துமிடம், குடிநீர் மற்றும் கழிப்பறை போன்ற வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

மேலும், திருப்பூர் நகரில், 2 கோடியே 47 லட்சத்து 49 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள திருப்பூர் (வடக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம்; புதுக்கோட்டை மாவட்டம் – இலுப்பூரில் 1 கோடியே 26 லட்சத்து 48 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பகுதி அலுவலகக் கட்டடம்; வேலூர் மாவட்டம் – ஆம்பூரில் 1 கோடியே 26 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பகுதி அலுவலகக் கட்டடம்; திருச்சிராப்பள்ளி மாவட்டம் – முசிறியில் 1 கோடியே 23 லட்சத்து 59 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பகுதி அலுவலகக் கட்டடம்;

சென்னை, ஆர்.கே. நகரில் 3 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சென்னை (வடகிழக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம்; வேலூர் சரக துணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகத்திற்கு வேலூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தின் முதல் தளத்தில் 98 லட்சத்து 41 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள துணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகக் கட்டடம்;

வேலூர் மாவட்டம், சேர்காட்டில் 16 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கணினி அறை, வரி மற்றும் இணக்கக் கட்டணம் செலுத்தும் கட்டண மேடை, வாகனம் நிறுத்துமிடம் ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள சேர்காடு சோதனைச் சாவடி;

என மொத்தம் 13 கோடியே 7 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உள் (போக்குவரத்து) துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் திரு.பா. பென்ஜமின், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர். விஜயபாஸ்கர், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாடுத் துறை அமைச்சர் திரு.க. பாண்டியராஜன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., போக்குவரத்து ஆணையர் திரு.சி. சமயமூர்த்தி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**